**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# திருச்சுழி அருகே மணவராயனேந்தலில் 1,000 ஆண்டுகள் பழமையான மகாவீரர் சிற்பம் கண்டெடுப்பு



மணவராயனேந்தலில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மகாவீரர் சிற்பம்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகேயுள்ள மணவராயனேந்தலில், ஆயிரம் ஆண்டுகள் பழமையான கி.பி.11-ம் நூற்றாண்டு மகாவீரர் சிற்பம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அருப்புக்கோட்டை எஸ்.பி.கே.கல்லூரி வரலாற்றுத் துறை உதவிப் பேராசிரியர் சு.ராஜபாண்டி, தொல்லியல் துறை பயிற்சி மாணவர் மீ.சரத்ராம் ஆகியோர் திருச்சுழி பகுதியில் கள ஆய்வின்போது, மணவராயனேந்தலில் இளையராஜா என்பவருக்குச் சொந்தமான தோட்டத்தில் 24-ம் தீர்த்தங்கரர் மகாவீரர் சிற்பம் இருப்பதைக் கண்டறிந்தனர்.

அவர்கள் கொடுத்த தகவலின்பேரில், ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத் தலைவர் வே.ராஜகுரு, ஆய்வாளர் நூர்சாகிபுரம் சிவக்குமார் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து வே.ராஜகுரு கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில் கோவிலாங்குளம், தொப்பலாக்கரை, குரண்டி, இருஞ்சிறை, புல்லூர், பாலவநத்தம், பந்தல்குடி, பாறைக்குளம், திருச்சுழி, புலியூரான், ஆவியூர், இருப்பைக்குடி, குலசேகரநல்லூர், சேத்தூர், சென்னிலைக்குடி, கீழ்

இடையங்குளம், கிள்ளுக்குடி உள்ளிட்டஇடங்களில் சமண சமயம் பரவிஇருந்ததற்கான தடயங்கள் ஏற்கெனவே கண்டறியப்பட்டுள்ளன.

தற்போது, மணவராயனேந்தலில் கண்டறியப்பட்ட மகாவீரர் சிற்பம் பாதி மண்ணில் புதைந்தநிலையில் உள்ளது. கருங்கல்லால் ஆன இந்த சிற்பத்தில் மகரத்தண்டுகளுடன் கூடிய சிம்மாசனத்தில் மகாவீரர் அமர்ந்துள்ளார்.

அவருக்குப் பின்புறம் பிரபாவளி எனும் ஒளிவட்டம் உள்ளது. அதன் மேற்பகுதியில் சந்திராதித்தம், நித்திய விநோதம். சகல பாசனம் ஆகியவற்றைக் குறிக்கும் முக்குடை அமைப்பு உள்ளது. முக்குடை அழகிய கொடிகளுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

மகாவீரரின் இருபுறமும் இரு இயக்கர்கள் உள்ளனர். இதன்காலம் கி.பி.11-ம் நூற்றாண்டாகக் கருதலாம். திருப்புல்லாணியிலிருந்து கமுதி, திருச்சுழி வழியாக மதுரை செல்லும் பெருவழிப் பாதையில் அநேக இடங்களில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் கிடைத்திருக்கின்றன.

சிற்பம் உள்ள இடத்தைச் சுற்றிலும் இரும்புக் காலத்தைச் சேர்ந்த வழுவழுப்பான கருப்பு, சிவப்பு நிற பானை ஓடுகள் சிதறிக் கிடக்கின்றன.

சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான இரும்புக் காலம் முதல்மக்கள் குடியிருப்பாக இந்த ஊர்இருந்துள்ளது. அதற்கு ஆதாரமாகஇவை உள்ளன. எனவே, இந்தசிற்பத்தை அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

## 2023-ல் 59 ஆயிரம் இந்தியர்களுக்கு அமெரிக்க குடியுரிமை




**புதுடெல்லி:** 2023-ம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் குடியுரிமையை 59,100 இந்தியர்கள் பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2023-ம் ஆண்டில் அமெரிக்கநாடானது, 8.7 லட்சம் வெளிநாட்டவர்களுக்கு அமெரிக்க குடியுரிமையை வழங்கியுள்ளது. இதில் 59,100 பேர் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களாகும்.

இதையடுத்து கடந்த ஆண்டு அமெரிக்க குடியுரிமை பெற்றவெளிநாட்டவர்களின் பங்கில் இந்தியர்களின் பங்கு 6.7 சதவீதம் ஆகும். கடந்த 2022-ம் ஆண்டு 9.69 லட்சம் பேருக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதை விட குறைந்த எண்ணிக்கையிலேயே கடந்த 2023-ல் வெளிநாட்டவருக்கு அமெரிக்க அரசு குடியுரிமை வழங்கி உள்ளது. இந்நிலையில் 2022-ல் அமெரிக்கக் குடியுரிமை பெற்ற8.7 லட்சம் பேரில் 1.1 லட்சம் பேர் மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந் துள்ளது.

இந்த ஆண்டு அமெரிக்க குடியுரிமை பெற்ற வெளிநாட்டவர்களில் மெக்ஸிகோ நாட்டவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இது 12.7 சதவீதமாகும். இதையடுத்து 2-வது இடத்தைப் பெற்றுள்ளது இந்தியா. மொத்தம் 59,100 இந்தியர்கள் அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். இது 6.7 சதவீதமாக உள்ளது.

இதற்கு அடுத்த இடத்தில் பிலிப்பைன்ஸ் உள்ளது. அந்த நாட்டைச் சேர்ந்த 44,800 பேர் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். அதற்கு அடுத்த இடங்களில் டொமினிக்கன் ரிபப்ளிக், கியூபா நாட்டவர்கள் உள்ளனர். அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்றச் சேவைப் பிரிவின் அறிக்கையில் இத்தகவல் தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-ல் மொத்தம் 9.69 லட்சம் வெளிநாட்டு மக்களுக்கு அமெரிக்க அரசு குடியுரிமையை வழங்கியது. அதில் 1.3 லட்சம் பேர் மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்த வர்களாகவும், 65,960 பேர் இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களாகவும், 53,413 பேர் பிலிப்பைன்ஸைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்.

அமெரிக்காவில் கிரீன் கார்ட் பெற்று 5 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் வசிப்பதற்கான குடியுரிமை கேட்டுவிண்ணப்பிக்கலாம்.

அதே நேரத்தில் இந்த விஷயத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்த நபர்கள் காத்திருக்கும் கால அளவு 3 ஆண்டுகளாக உள்ளது. ஆனாலும், கிரீன் கார்ட்கேட்டு விண்ணப்பித்து நீண்ட காலமாக இந்திய மக்கள் அமெரிக்காவில் காத்திருக்கும் நிலையும் அங்கு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.